மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : 1974 மார்ச்சு மாதம் அந்தக் குழு கல்வி அமைச்சரைச் சந்திக்காவிட்டாலும், அதற்கு முன்பாவது அல்லது அதற்குப் பிறகாவது சந்தித்திருக்கிறதா? அக்குழு என்னென்ன கோரிக்கைகளை எழுப்பி இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது ஆணையாளரைச் சந்தித்தபொழுது அவர்களுக்கு தேர்வு நிலை தர வேண்டும் என்பதுதான் முக்கியமான கோரிக்கை. 1—4—74 முதல் 10 ஆண்டுகள் பணி புரிந்த இடை நிலை ஆசிரியர்களுக்கு தேர்வு நிலை வழங்க அரசு ஆணையிட்டது.

திரு. கோ. இளங்கோவன் : இடை நிலை ஆசிரியர்கள் பட்டம் பெற்ற பிறகும், பயிற்சியும் பெற்று இடைநிலை ஆசிரியர்களாகவே பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு பட்டதாரி ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் ஊதியம் அளிக்க அரசு முன்வருமா? ஒன்றிய உயர் நிலைப் பள்ளிகளில் பட்டம் பெற்ற இடை நிலை ஆசிரியர்களை உடனடியாக நடுநிலைப் பள்ளிகளில் தலைமை ஆசிரியராக அமர்த்துவதற்கு ஆணை பிறப்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இடைநிலை ஆசிரியர்கள் பட்டம் பெற்றுவிட்ட காரணத்தினாலேயே அவர்களுக்கு பட்டதாரி ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் ஊதியம் தர இயலாது. அவர்கள் பெற்றிருக்கிற தகுதிக்கு ஏற்ப பட்டதாரி ஆசிரியர்கள் பதவியில் அவர்களை நியமிக்க முன்னுரிமை தர வேண்டுமென்று எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அப்படிப்பட்ட முன்னுரிமை தொடர்ந்து வழங்கப்பட்டிருக்கிறது.

New industries in Joint Sector.

* 704 Q.—THIRU N. K. PALANISAMY :
THIRU B. VENKATASWAMY :
THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(a) whether it is a fact that a project to produce high quality grey iron castings used for making engine blocks is to be set up in Tamil Nadu in the joint sector; and

(b) if so, the details thereof?

1975 ஏப்ரல் 18]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) ஆண்டு ஒன்றுக்கு 20,000 டன்கள் வரை உலைக்கள வார்ப்படங்கள் தயாரிக்க தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் ஒரு இசைவுக் கடிதம் பெற்றுள்ளது. இத்திட்டத்திற்கு பெல்கிரேடில் உள்ள "பேப்ரிகா ஒட்லிவாகா" என்ற நிறுவனம் தொழில் நுட்ப உதவி அளிக்கும். இத்தொழிற்சாலை மதிப்பீட்டுச் செலவு ரூ. 11 கோடி. "அமால்கமேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்" என்ற கம்பெனியுடன் சேர்ந்து கூட்டுத் துறையில் தொழிற்சாலை நிறுவப் படும்.

திரு. என். கே. பழனிசாமி : இதில் சர்க்காருடைய பங்கென்ன? மற்ற நிறுவனங்களுடைய பங்கென்ன? இது எந்த இடத்தில் லொகேட் செய்யப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது அரக்கோணத் தில் அமைக்கப்படும் என்ற குறிப்பு இருக்கிறது. இதிலே total capital outlay Rs. 11 crores, equity capital may be Rs. 4 crores. TIDCO 26%, Amalgamations Private Ltd. 25%, அதிலே . tro. public.

திரு. என். கிட்டப்பா : இந்தத் தொழிற்சாலை நீண்டகாலமாக ஆய்வில் உள்ளதாகத் தெரிகிறதே, இது எப்போது செயல்படத் துவங்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : முதல் கட்டம் 1977 இல் முடிந்து செயல்படத் துவங்கும். இதன்மூலம் 500 பேர் களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது.

திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன் : இதற்கு 11 கோடி ரூபாய் மூலதனம் போடப்படும் என்று சொல்லப்படுகிறதே, எத்தனை பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : முதல் கட்டமாக 500 பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்று தெரிவித்தேன்.

[1975 ஏப்ரல் 18

திரு. கே. எ. வகாப்: அரக்கோணத்தில் இதற்கு முன்பே ஒரு இரும்புத் தொழிற்சாலை இருக்கிறது. இதுவும் அரக்கோணத்தில் அமையும் என்று சொல்லப்படுகிறதே, அதோடு இணைப்பான தொழிற்சாலையாக இது இருக்குமா? தனியாக இயங்கும் என்றால் வேறு ஒரு தொழிற்சாலையையும் அதே ஊரில் வைக்க வேண்டுமா? வட ஆற்காடு மாவட்டத்தில் வேறு பல ஊர்கள் இருக்கின்றனவே, அவற்றில் ஏதாவது ஒன்றில் இதனை நிறுவக் கூடாதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அரக்கோணம் வட ஆற்காடு மாவட்டத்தில்தான் இருக்கிறது.

* 705 *Q*.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state—

(*a*) whether a joint sector project is to be set up in Tamil Nadu for the manufacture of measuring instruments like micrometers, dial guages, etc., and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) கூட்டுறவுத் துறை நிறுவனமாகிய "நுண் அளவைக் கருவிகள் லிமிடெட்" இயந்திரத் தொழிலுக்கு வேண்டிய மைக்ரோ மீட்டர்கள், டையல் காஜ்கள் மற்றும் கருவிகளை அயல்நாட்டுத் தொழில் நுட்ப உதவியுடன் தயாரிக்கும். அயல்நாட்டு ஒத்துழைப் பிற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதன் அடிப்படையில் அயல்நாட்டு நிறுவனங்களுடன் கடந்த அக்டோபர் மாதத்தில் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. தொழிற்சாலை அடையாரில் அமைக்கப்படும்.

திரு. என். கே. பழனிசாமி: இது எந்த நாட்டினுடைய கொலா பரேஷனுடன் அமைக்கப்பட இருக்கிறது? இதன் முதலீட்டின் ஒவ்வொன்றின் பங்கென்ன? சர்க்காருக்கு டாமினேடிங் பொசிஷன் இருக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இதில் capital cost Rs. 80 lakhs. Equity capital Rs. 30% lakhs. இதிலே TIDCO 26% தனியார் 25% and public 49%. Foreign technical know-how is from M/s. C. E. Johnson, Sweden and J. M. Maskines, Stockholm.